***புனித சனி***

***திருவழிபாடு ஆண்டு - A***

**2023-04-08**

*- ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா -*

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 10:34, 37-43 ,

*திருப்பாடல்* 118:1-2, 16-17, 22-23 ,

*திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 3:1-4,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 20: 1-9 )

*திருப்பலி முன்னுரை*

*ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தம் திருமகன் இயேசுவை உயிர்ப்பித்து நமக்கு வாழ்வு தரும் நம் இறைவனின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இன்று புனித சனி. இயேசுவின் உயிர்ப்பை நினைவு கூர்ந்து மகிழும் நன்நாள். இஸ்ரயேல் மக்களை இருளின் உறவிலிருந்தும் மரணத்தின் பிடியிலிருந்தும், அடிமைத்தனத்தின் ஆதிக்கத்திலிருந்தும் மோசே விடுவிக்க இறைவனின் பாஸ்காவை கொண்டிடாடி - செங் கடல் வழியாக நடத்தி பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு கூட்டிச் சென்றார். ஒளியின் பாதையிலும் மேகத்தூணின் வழிநடத்தலிலும் நடந்து சென்று அந்த காணான் நாட்டை உரிமையாக்கினார்கள். இன்னும் பாவ இருளில் இருந்தும் சாவின் பிடியிலிருந்தும் விடுவிக்க இயேசு இறந்து உயிர்த்த இந்த இரவு இலட்சிய கனவுகளுக்கு சாவில்லை என்று உணர்த்துகிறது. உரிமைகளும் சுதந்திரங்களும்*

*உயிர்பெற்று எழும் நேரம் வந்துவிட்டது. சாவே உன் கொடுக்கு எங்கே என்று வெற்றி வேந்தனாய் உயிர்த்த எம்பெருமான் இயேசுவின் இலட்சியம் நிறைவேறியது போல நாமும் நமது இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு சாவிலிருந்து வாழ்வுக்கும், அநீதியிலிருந்து உண்மைக்கும், பொய்மையிலிருந்து மெய்மைக்கும் அழைத்துச் செல்ல இயேசு உயிர்த்தார், நாமும் உயிர் பெறுவோம். இதில் முழுமையாகப் பங்கெடுத்து இறைவன் இயேசுவின் உயிர்ப்பில் புதுவாழ்வைத் தொடங்குவோம்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*உயிரளிக்கும் உடனிருப்பே எம் இறைவா!*

*எம் தாய் திருச்சபையை உம் கையில் அர்ப்பணிக்கிறோம். முழுவிடுதலையை*

*நோக்கி பயணமாகும் திருச்சபை புத்துயிர் பெற்ற புதிய எருசலேம் திருநகராக திகழ்ந்து உலகிற்கு ஒளியாய் திகழவும். திருச்சபை வழிகாட்டிகள் அனைவரும் உம் திருவுளத்தின்படி அன்பையும், நீதியையும் சமாதானத்தையும் இப்புவியில் பரப்பிட எங்களை வழிநடத்த எம் தலைவர்களுக்கு வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் பேரொளியே இறைவா!*

*சாவை வென்று வெற்றி வீரராய் நீர் பவனி வந்ததை போன்று, நாங்களும் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல் இருக்கவும், சோதனைகளைக் கண்டு கண்ணீர் வடிக்காமல் அவற்றைத் துணிவோடு போராடி வெற்றிகொள்ளவும் வரம் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் ஒளியே இறைவா!*

*பாஸ்கா என்றாலே கடத்தல் என்பதை உணர்ந்து, எங்களது பழைய பாவ இயல்புகளில் இருந்து கடந்து உம் அன்பின் சிறகுகளுக்குள் தஞ்சம் அடையவும், நம்பிக்கை அன்பு, அருள் போன்ற பாஸ்கா விழாவின் கனிகளை நிரம்ப பெற்று வாழ்ந்திடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உலகின் மீட்பரே எம் இறைவா!*

*உயிர்ப்பின் பாஸ்கா பலியை கொண்டாடும் உம் பிள்ளைகள் எங்கள் ஒவ்வொருவரையும் நீர் நிறைவாக ஆசீர்வதியும். உமது உயிர்ப்பின் ஒளியால் வளமான எதிர்காலத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்று வாழ்வில் வெற்றி பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஞானத்தின் ஊற்றே இறைவா!*